1981 மார்ச் 7]

அம்மை குத்தும் சுகாதாரப் பணியாளர்களின் பணி ஒழுங்கீடு.

*வினா எண். 427.—திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அம்மை குத்தும் சுகாதாரப் பணியாளர்களை எட்டு ஆண்டுகள் பணியாற்றிய பிறகுதான் பணி ஒழுங்கு செய்யப் படுகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அம்முறையை மாற்றி பணியில் சேர்ந்ததி லிருந்தே மற்ற அரசு ஊழியர்களைப்போல் அவர்களையும் பாவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) தற்போது இம்முறையை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இப்போது பணியில் உள்ள அம்மை குத்தும் ஊழியர்கள் 8 ஆண்டுக் காலம் வரைக்கும் பணியாற்றியும் பணியாளர்களாக ஒழுங்கு படுத்தப்படவில்லை என்றும், அரசு பணியாளர்களுக்கு உள்ள உரிமைகள் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லையென்றும் வேதனையோடு அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த வசதிகளை எப்போ திருந்து கொடுக்க அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : படிப்படியாக வசதிகளைச் செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறது அரசு. 12–5–75 இல் ஜி. ஓ. எம். எஸ். 1181 இல் To regularise for the present the services of only 214 vaccinators of the National Small-Pox Eradication Programme, that is, only those who have put in more than 8 years of service, and to grant the time-scale of pay of Rs. 170—5—255 to the 214 vaccinators who have put in more than 8 years of service என்று எல்லாம் அவர்களுக்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் படிப்படியாக பல ஆணைகளைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். படிப்படியாக அவர்களுடைய குறைகள் நீக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்துள்ள விவரங்களே அந்தஊழியர்கள் எவ்வளவு பரிதாபகரமான நிலைமையில் உள்ளார்கள் என்பதைக் காட்டுகிறது. வேக்சினேட்டர்ஸ், அம்மை குத்தும் பணியாளர்கள் நகரங்களிலும், கிராமங்களிலும் தெருத்தெருவாகச் சென்று நோயைத் தடுக்கின்ற முயற்சியிலே ஈடுபட்டு சமுதாயத்திற்குச் சிறந்த முறையிலே சேவை செய்யக் கூடியவர்கள், அவர்களுக்கு ஆரம்பச் சம்பளம் 165 என்றால்

முனிசிபல் தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளம் கூட அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்று தெரிகிறது, எனவே இதையெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொண்டு அவர்களுடைய சம்பள ஸ்கேலை நான்காவது நிலை பணியாளர்களுக்குக் கொடுக்கப்படுகிற ஸ்கேலைப் போன்று கொடுக்க உடனடியாக ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பார்கள் என்று எனக்குத் தெரியும். Based on the recommendation of the Third Pay Commission, Government have issued orders granting the time scale of Pay of Rs. 295—5—315—10—475 to all vaccinators with effect from 1—4—1978 and there is no fixed pay for the vaccinators from that date. ஆகவே நிலைமைகள் இப்போது அவ்வளவு மோசமாக இல்லை. கேள்வி கேட்டதற்குப் பிறகு கடைசியாகச் சொல்லலாம் என்று வைத்திருந்தேன்.

திரு. தி. கா. நல்லப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் தொழிற்சாலைகளில் 240 நாட்கள் வேலை செய்தால் அவர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக்க வேண்டுமென்பது விதி. அப்படி இருக்கிறபோது இந்த அம்மை குத்தக்கூடிய தொழிலாளர்களுக்கும் அவ்வாறு செய்து முறையாக அவர்களுக்கு சம்பளம் கொடுக்காததற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10).

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் அதற்கான விடையை ஏற்கனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் எழுப்பிய கேள்விக்குக் கொடுத்திருக்கிறேன். By stages, we are making them permanent.

திருமதி தா. இராசாம்பாள்: பேரவைத் தலைவரவர்களே, இங்கு கேட்கப்பட்ட கேள்வி அவர்களின் பணியை ரெகுலரைஸ் செய்வது சம்பந்தமானதாகும். அவர்களின் அடிப்படைச் சம்பளத்தை உயர்த்துவது என்பது வேறு; பணியை ரெகுலரைஸ் செய்வது என்பது வேறு. அவர்கள் பணியில் சேர்ந்து ஓராண்டுக் காலத்திற்குள் பணியை ரெகுலரைஸ் செய்திருக்க வேண்டும். எட்டாண்டுக் காலமாக ரெகுலரைஸ் செய்யாததன் காரணமாக இனியாவது உடனடியாக அவர்களை ரெகுலரைஸ் செய்வதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கனவே பதில் கொடுத்திருக்கிறேன். 1972 ஆம் ஆண்டிலிருந்து இருக்கின்ற பிரச்னையாக இருக்கிறது. From 1-4-72 onwards அப்பொழுதிருந்து

1981 மார்ச் 7]

இருக்கின்ற பிரச்னை. படிப்படியாக இப்பொழுது கிட்டத் தட்ட மூன்றில் இரண்டு பங்கு 2/3rds have been regularised ரெகுலரைஸ் செய்து விட்டோம். எல்லோரையும் ரெகுலரைஸ் செய்யக்கூடிய அந்தக் குறிப்புகளை நாம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம்.

சித்த மருத்துவர்களைப் பதிவு செய்தல்.

*வினா எண். 428.—திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு இந்திய மருத்துவ கழகத்தின் ஆர். ஐ. எம். பி. (R.I.M.P.) பதவிக்காக 1978 ஆம் ஆண்டில் தேர்வு எழுதிய சித்த மருத்துவர்கள் இன்னும் பதிவு செய்யப்படாமல் இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் இக்குறையை நீக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இது அரசின் பரிசீலனையிலுள்ளது.

திரு. ப. நெடுமாறன் : மதிப்பிற்குரிய அவைத் தலைவரவர்களே, 1978 ஆம் ஆண்டில் தேர்வு எழுதி இரண்டாண்டுக் காலமாகியும் கூட இவர்கள் இன்னும் பதிவு செய்யப்படாமல் இருப்பதற்கு ஏதாவது சட்டச் சிக்கல் உள்ளதா ? அப்படிச் சட்டச் சிக்கல் இருந்தால் அது மத்திய அரசு மட்டத்தில் இருக்கிறதா அல்லது இந்த அரசு மட்டத்தில் இருக்கிறதா ? தாமதத்திற்கான காரணம் இருக்கிறதா என்பதை அரசு அறிவிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, முதலிலே சில பேர் எழுதினார்கள். அடிப்படையான மார்க்குகள் கிடைக்கவில்லை என்று மீண்டும் ஒரு முறை 18-6-1978இல் இரண்டாவது வாய்ப்பு அளிக்கப் பட்டது. Section 17 of the India Medicines Council Central Act of 1970 imposes certain restrictions for registering practitioners of I dia Medicine. This was brought into force in 1976 through Central Act. Only according to the Indian Medicines Council Central Act, those possessing prescribed qualifications can be registered in the Central register or State register. Those who do not possess the prescribed qualification cannot be registered after 1—10—1976.